தினமணி

**கடும் வறட்சி: தக்காளி விலை "கிடு கிடு' உயர்வு**

First Published : 04 May 2010 12:00:00 AM IST
Last Updated : 04 May 2010 06:06:36 AM IST



திருத்தணி, மே 3: திருத்தணியில் நிலவும் கடும் வறட்சி காரணமாக, தக்காளி விளைச்சலில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.
திருத்தணி காமராஜர் மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வரும் தக்காளி பழத்தின் வரத்து பாதியாக குறைந்துள்ளதால் தக்காளி விலையில் திடீர் உயர்வு ஏற்பட்டுள்ளது.
தக்காளி விலை உயர்வு பெண்கள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.
திருத்தணி நகருக்கு சென்னை, பெங்களூர், வேலூர், மற்றும் ஆந்திரா மற்றும் திருத்தணியை சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து தக்காளி பழங்கள் விற்பனைக்கு வருகிறது. ஆனால், திருத்தணிக்கு விற்பனைக்கு வந்து கொண்டுடிருந்த நாணமங்களம், ராமகிருஷ்ணாபுரம், தாழவேடு, பொன்பாடி இப்பகுதியில் ஏற்பட்ட விளைச்சல் குறைவால் சில மாதங்களாக தக்காளி வரத்து மிகவும் குறைந்து உள்ளது.

மேலும் பெங்களூர், சென்னையில் இருந்து நாள் ஒன்றுக்கு 2 லோடு தக்காளி விற்பனைக்கு வந்து கொண்டு இருந்தது. தற்போது வரத்து குறைந்து ஒரு லோடு மட்டும் விற்பனைக்கு வருகிறது என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.
இரண்டு வாரத்துக்கு முன்னர் பழங்கள் அனைத்தும் 1 கிலோ 10 ரூபாய்க்கு குறைவாக விற்கப்பட்டு வந்தது.
திருத்தணியில் சில தினங்களுக்கு முன் நாட்டுத் தக்காளி கிலோ எட்டு ரூபாய்க்கு விற்று வந்தது, திங்கள்கிழமை கிலோ 15 ரூபாய்க்கு உழவர் சந்தையிலும், வெளி மார்க்கெட்டில் 20 ரூபாய்க்கும் விற்கப்பட்டது.
கடந்த 10 நாளுக்கு முன் 120 ரூபாய் முதல் 150 ரூபாய் வரை விற்ற, 15 கிலோ கொண்ட பெட்டி ஒன்று தற்போது 250 ரூபாய் முதல் 300 ரூபாய் வரை விற்கிறது. கிலோ 10 ரூபாய்க்கு விற்று வந்த நாட்டுத் தக்காளி கிலோ 14 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.
இதே போன்று சென்ற வாரம் வரை 12 ரூபாய்க்கு விற்று வந்த பெங்களூர் தக்காளி வரத்து குறைவு காரணமாக தற்போது கிலோ 20 ரூபாய்க்கு விற்பனை ஆகிறது.

இதுகுறித்து ராமகிருஷ்ணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ராமைய்யா கூறியதாவது: தற்போது நிலவும் கடும் வறட்சியின் காரணமாக ஏரிகள் மற்றும் கிணறுகளில் கடும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் மின்சார தடை காரணமாக மோட்டார்களை இயக்கி பயிர்களுக்கு தேவையான தண்ணீரை பாய்ச்ச இயலவில்லை. இதன் காரணமாக தக்காளி பயிர்கள் மட்டுமின்றி பிற பயிர்களும் தண்ணீர் கிடைக்காமல் கருகி வருகிறது.
இந்நிலை தொடரும் பட்சத்தில் அனைத்து காய்கறிகளின் வரத்திலும் சரிவு ஏற்பட்டு, விலையில் கடும் உயர்வு ஏற்படும் என்றார்.

**பட்டு விவசாயிகளுக்கு காப்பீடு**

First Published : 04 May 2010 01:40:02 AM IST

சென்னை, மே 3: பட்டுப்புழு வளர்ப்பை ஊக்குவிக்க 5 ஆயிரம் பட்டு விவசாயிகளுக்கு காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று கதர்த் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் அறிவித்தார்.
சட்டப் பேரவையில் திங்கள்கிழமை நடைபெற்ற கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருள்கள் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்கு பதில் அளித்து அவர் பேசியதாவது:
தமிழகத்தில் முதன்முறையாக விவசாயிகளுக்கு கிரியா ஊக்கி திட்டத்தின் கீழ் பட்டுத் தொழிலுக்கான காப்பீட்டுத் திட்டம் நடப்பாண்டில் செயல்படுத்தப்படும். இதனால் 5 ஆயிரம் பட்டு விவசாயிகள் பயன் பெறுவார்கள்.
மத்திய, மாநில அரசுகளின் உதவியுடன் 2008-09 முதல் பெண் பட்டு விவசாயிகளுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக 2010-11-ல் காப்பீட்டுக் கட்டணமாக ரூ. 36 லட்சத்து 17 ஆயிரத்து 380 செலுத்தப்படும்.
மல்பரி நடவு செய்யும் விவசாயிகளுக்கு மானியமாக ஒரு ஏக்கருக்கு ரூ.4,125 வீதம் ரூ.3.09 கோடி 2010-11-ல் வழங்கப்படும். பட்டுப்புழு வளர்ப்புக் கூடம் அமைக்க 2010-11-ல் 1,240 விவசாயிகளுக்கு ரூ.6.43 கோடி மானியம் வழங்கப்படும்.
1,500 ஏக்கர் மல்பரி தோட்டங்களுக்கு சொட்டுநீர் பாசன வசதி அமைக்க ரூ.2.25 கோடி மானியம் வழங்கப்படும்.
நவீன புழு வளர்ப்பு உபகரணங்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் வாங்க 1,200 விவசாயிகளுக்கு ரூ.3.60 கோடி மானியம் வழங்கப்படும்.
காஞ்சிபுரம், ஆரணி, கும்பகோணம், பரமக்குடி, கோவை, சேலம் ஆகிய இடங்களில் உள்ள 4 ஆயிரம் பழமையான பட்டு கைத்தறிகளை மேம்படுத்த ரூ.3 கோடி உதவித் தொகை வழங்கப்படும்.
வெண்பட்டு நூலுக்கான ஊக்கத் தொகை ரூ.2.40 லட்சத்திலிருந்து ரூ.15 லட்சமாக அதிகரிக்கப்படும். தமிழகத்துக்கு வழங்கும் நிதியை மத்திய பட்டு வாரியம் இரண்டு மடங்கு அதிகரிக்க உள்ளது என்றார் கா.ராமச்சந்திரன்.

**புவி வெப்பமாதல் விழிப்புணர்வு பயணம் மே 15-ல் தொடக்கம்**

First Published : 04 May 2010 06:59:10 AM IST

சாத்தான்குளம், மே 3:   சாத்தான்குளத்திலிருந்து கன்னியாகுமரிக்கு புவி வெப்பமாதல் விழிப்புணர்வு மிதிவண்டி பயணம் மே 15-ல் துவக்கப்படுகிறது.
விழிப்புணர்வு பயணம் குறித்த கலந்துரையாடல் மற்றும் மே தினக் கூட்டம் எஸ்.ஆர். திருமண மண்டபத்தில் சனிக்கிழமை நடைபெற்றது. மனித நேய பெருமன்ற பொருளாளர் கணபதி தலைமை வகித்தார். மன்ற பொறுப்பாளர்கள் மாஸ்டர் ஜோசப்
மெஸ்மின், செல்வசூரியமுத்து, கல்யாணி,ஜான் சாமுவேல், சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
ஈஸ்வர்சுப்பையா வரவேற்றார்.

சாத்தான்குளம் வட்டார மனித நேய பெருமன்றம் மற்றும் 18 மக்கள் நல அமைப்புகள் சார்பில் புவி வெப்பமாதல் விழிப்புணர்வு மிதிவண்டி பயணம் சாத்தான்குளத்தில் மே 15-ம் தேதி துவங்கி, 16-ம் தேதி கன்னியாகுமரியில் நிறைவடையும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.
கூட்டத்தில், விழிப்புணர்வு பயணத்தில் பங்கேற்கும் தன்னார்வ தொண்டர்களுக்கு சீருடைகள் வழங்கிய டாடா ஸ்டீல் மற்றும் இந்தியன் காஸ் நிறுவனத்திற்கு பாராட்டு தெரிவித்தும், இந்த மிதி வண்டி பயணத்தில் 100-க்கும் மேற்பட்டோர் பங்கேற்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

முன்னாள் அரசு ஊழியர் சங்க வட்டத் தலைவர் பாலகிருஷ்ணன், மிதிவண்டி பயண அணித் தலைவர்கள் மணிகண்டன்,பிச்சைமணி, முருகேஷ், ராமச்சந்திரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

மனித நேய பெருமன்ற செயலர் மகா. பால்துரை நன்றி கூறினார்.

**வேளாண் சேவை மையம் தொடக்கம்**

First Published : 04 May 2010 01:17:41 AM IST

காஞ்சிபுரம், மே 3: காஞ்சிபுரம் மாவட்டத்தில் முதன் முதலாக வேளாண் சேவை மையம் செங்கல்பட்டு அருகே தொடங்கப்பட்டுள்ளது.
÷காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டு வட்டத்தில் வில்லியம்பாக்கம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் உள்ளது. இச் சங்கத்தில் விவசாயிகள் நலன் கருதி புதிதாக வேளாண் சேவை மையம் தொடங்கப்பட்டுள்ளது. இவ் விழாவில் சிறப்பு விருந்தினராக காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கியின் இணைப்பதிவாளர் த.காமாட்சி பங்கேற்றார்.
÷ செங்கல்பட்டு பகுதியில் தொடங்கப்பட்ட வேளாண் சேவை மையம் போல், கூட்டுறவு சங்கங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள், பொதுமக்கள், விவசாயிகள் பயனடையும் வகையில் பொது சேவை மையங்கள் தொடங்கப்படும். தற்போது தொடங்கப்பட்டுள்ள விவசாயிகள் சேவை மையம் மூலம் நவீன இயந்திரங்கள், நெல் நாற்று நடவு இயந்திரம், களை எடுக்கும் இயந்திரம் ஆகியவை வாங்கி வைக்கப்பட்டுள்ளன. இவைகளை விவசாயிகள் குறைந்த வாடகையில் எடுத்துச் சென்று பயன்படுத்தலாம் என்றார்.
÷இந் நிகழ்ச்சியில் வேளாண்மை துறை உதவி இயக்குநர் சேகர், காட்டாங்குளத்தூர் கூட்டுறவு சங்க கள அலுவலர் ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

தினமலர்

**அடுத்த தலைமுறை விவசாயத்தின் மந்திரம் எது? பயிர் ஆராய்ச்சி நிறுவன தலைவர் பேச்சு**

கோவை: "குறைவான நீரில் அதிக மகசூல் பெற வேண்டும் என்பதே, அடுத்த தலைமுறை விவசாயத்தின் மந்திரமாக இருக்கும்," என, மிதவெப்ப மண்டலங்களுக்கான சர்வதேச பயிர் ஆராய்ச்சி நிறுவன தலைவர் பிக்சம் குஜ்ஜா பேசினார்.

செம்மை கரும்பு சாகுபடி திட்ட அறிமுக விழா, கோவை வேளாண் பல்கலையில் நடந்தது. ஐதராபாத்தில் உள்ள மிதவெப்ப மண்டலங்களுக்கான சர்வதேச பயிர் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச நிறுவன விஞ்ஞானிகள், சர்க்கரை ஆலை அலுவலர்கள், வேளாண் பல்கலை விஞ்ஞானிகள் மற்றும் கரும்பு விவசாயிகள் ங்கேற்றனர். மிதவெப்ப மண்டலங்களுக்கான சர்வதேச பயிர் ஆராய்ச்சி நிறுவன தலைவர் பிக்சம் குஜ்ஜா

பேசியதாவது: குறைந்த நீர், விதை மற்றும் உரத்தை பயன்படுத்தி விவசாயம் செய்வது பெரும் சவாலானது. குறைந்த நீரில் அதிக மகசூல் என்பது அடுத்த தலைமுறை விவசாயத்தின் மந்திரமாக இருக்கும். தமிழகத்தில் அதிகமாக பயிர் செய்யப்பட்டு வெற்றி அடைந்துள்ள செம்மை நெல் சாகுபடி திட்டம், இந்தியாவில் 300 மாவட்டங்களில் பின்பற்றப்படுகிறது. இத்திட்டத்தின் வெற்றியை தொடர்ந்து, அதே கோட்பாடுகளின் அடிப்படையில் செம்மை கரும்பு சாகுபடி முறை உருவாக்கப்பட்டுள்ளது. இதன்படி குறைந்த நீர், சரியான அளவு உரம் மூலம் அதிக விளைச்சலை கொடுக்க முடியும்.

மொட்டுக்கரனை, இளம் நாற்றுக்களை நடுதல் (25 - 35 நாட்கள்), நடவு வயலில் அதிக இடைவெளி விட்டு நடுதல், சொட்டு நீர் பாசனம் அமைத்தல், இயற்கை உரங்கள் மற்றும் இயற்கை பூச்சி மருந்துகள் பயன்படுத்துதல், ஊடுபயிர் சாகுபடி செய்து நிலத்தை சரியான முறையில் பயன்படுத்துவது ஆகிய ஆறு முக்கிய கோட்பாடுகள் இத்திட்டத்தில் அடங்கும். தமிழகத்தில் வரும் பருவத்தில் சுமார் ஆயிரம் எக்டர் நிலப்பரப்பில் செம்மை கரும்பு சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. கரனைகளை வெட்டும் தரமான கருவிகளை விவசாயிகளுக்கு வழங்குதல், சொட்டு நீர் பாசனம் அமைக்க ஊக்குவித்தல், மகளிர் சுய உதவிக்குழுக்களைக் கொண்டு நாற்றுக்களை உற்பத்தி செய்தல், தரமான நாற்றுக்களை உற்பத்தி செய்து மானிய விலையில் சர்க்கரை ஆலைகள் மூலம் வழங்க ஏற்பாடு செய்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு, பிக்சம் குஜ்ஜா பேசினார்.

செம்மை கரும்பு சாகுபடி தொழில் நுட்ப கையேட்டை வெளியிட்டு, கோவை வேளாண் பல்கலை பதிவாளர் சுப்பையன் பேசியதாவது: இந்தியாவில் கரும்பு உற்பத்தி திறன் குறைய, பாசன நீர் தட்டுப்பாடே முக்கிய காரணம். ஒரு கிலோ கரும்பு உற்பத்திக்கு 250 லிட்டர் தண்ணீர் தேவை. தற்போதுள்ள சூழ்நிலையின்படி, கரும்பு சாகுபடிக்கு புதிய நீர் மேலாண்மை யுக்திகள் தேவைப்படுகின்றன. பாசன நீர் சிக்கனத்துக்காக அறிமுகம் செய்யப்பட்ட செம்மை நெல் சாகுபடியால் நெல் மகசூல் 36.8 சதவீதம் உயர்ந்துள்ளது. இந்த வெற்றியை அடிப்படையாக கொண்டு, செம்மை கரும்பு சாகுபடி தொழில் நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளது. மிதவெப்ப மண்டலங்களுக்கான சர்வதேச பயிர் ஆராய்ச்சி நிறுவனமும், இயற்கை பாதுகாப்புக்கான சர்வதேச நிறுவனமும் இணைந்து,

இத்தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளன. இதை பயன்படுத்தினால் கரனை செலவு குறையும். ஊடுபயிர்கள் மூலம் வருமானம் பெருகும். அகல இடைவெளி விடுவதால் அறுவடை இயந்திரங்களை பயன்படுத்த முடியும். கரும்பு அறுவடைக்கு அதிக வேலையாட்கள் தேவைப்படுவதால் 1.47 கோடி ரூபாய் வீதம், 85 கரும்பு அறுவடை இயந்திரங்களை வாங்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. இவை 17 கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு வழங்கப்படவுள்ளன. இந்த இயந்திரங்கள் மூலம் ஒரு மணி நேரத்தில் 15 - 20 டன் வரை கரும்பு அறுவடை செய்ய முடியும். இதனால் ஒரு டன் கரும்பு அறுவடை செய்வதற்கான கூலியில் 200 ரூபாய் வரை மிச்சப்படுத்தலாம்.

செம்மை கரும்பு சாகுபடியில் சொட்டு நீர் பாசன முறை கடைபிடிக்கப்படுவதால், தமிழகத்தில் கூடுதலாக 202 லட்சம் டன் கரும்பு உற்பத்தி செய்ய முடியும். அனைத்து மாநிலங்களிலும் இம்முறையை பின்பற்றினால், தேசிய கரும்பு உற்பத்தி திறனை எக்டருக்கு 105 டன்களாக உயர்த்த முடியும். இந்தியாவில் 4.1 மில்லியன் எக்டர் பரப்பளவில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. இதிலிருந்து 355 மில்லியன் டன் கரும்பு உற்பத்தியாகிறது. தேசிய அளவில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. ஆனாலும், சர்க்கரைத் திறனை பொறுத்தவரை 11.6 சதவீதத்துடன் மகராஷ்டிரா மாநிலம் முதலிடத்தையும், 9.6 சதவீதத்துடன் தமிழகம் இரண்டாமிடத்தையும் வகிக்கிறது. வரும் 2025ல் 30 மில்லியன் டன் கரும்பு உற்பத்தி செய்யப்பட வேண்டும். கரும்பு சாகுபடி பரப்பளவு அதிகரிக்க வாய்ப்பில்லை என்பதால், இந்த இலக்கை அடைய கரும்பு உற்பத்தி திறன் தேசிய அளவில் எக்டருக்கு 105 டன்களாக உயர வேண்டும். இவ்வாறு, சுப்பையன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், சென்னை வேளாண் இணை இயக்குனர் சுப்புராமன், வேளாண் பல்கலை நீர் நுட்ப மைய இயக்குனர் செல்லமுத்து, பேராசிரியர் பாண்டியன் உட்பட பலர் பேசினர்.

**விவசாயிகளுக்கு இலவச உரம்**

மேட்டுப்பாளையம்: காரமடை மேற்கு பகுதி விவசாயிகளுக்கு, தோட்டக்கலைத்துறை சார் பில் உரம் இலவசமாக ழங்கப்படுகிறது. வாழை பயிரிடும் பரப்பளவை அதிகரிக்க, தோட்டக்கலைத்துறை சார்பில் விவசாயிகளுக்கு உரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. மருதூர், தேக்கம்பட்டி, காளம்பாளையம், தோலம்பாளையம், வெள்ளியங்காடு, ஆதிமாதையனூர், தாயனூர், சீளியூர் கிராம விவசாயிகளுக்கு, தாயனூரிலுள்ள பழனிசாமி தோட்டத்தில் உரம் வழங்கப்படுகிறது.

உரம் வாங்க வந்த விவசாயிகள் கூறுகையில்,'தோட்டத்தில் காலையில் பல்வேறு வேலைகளை செய்ய வேண்டியிருப்பதால், மதியம் அல்லது மாலையில் தான் உரம் வாங்க செல்ல முடிகிறது. 'ஆனால், அதிகாரிகள் காலை 10.00 மணிக்குள் உரம் வாங்க வருமாறு கூறுகின்றனர். மாலை வரை உரம் வழங்கினால் பெரிதும் உதவியாக இருக்கும்,' என்றனர். விவசாயிகளின் கோரிக்கை குறித்து, வேளாண் உதவி அலுவலர் சேகர் கூறுகையில், "விவசாயிகளுக்கு, உரங்களை பிரித்து வழங்க வேண்டியுள்ளது. "அதேநேரத்தில், நான் குறித்த நேரத்தில் அலுவலகத்துக்கும் செல்ல வேண்டியுள்ளது. அதனால் தான், காலை 10.00 மணிக்குள் உரம் வாங்க வருமாறு விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டது.

**கால்நடைகளுக்கான சினை ஊசி கட்டணம் குறைப்பு**

குஜிலியம்பாறை : கால்நடைகளுக்கு சினை ஊசி போடுவதற்காக கட்டணம் 15 ரூபாயில் இருந்து, பத்து ரூபாயாக குறைக்கப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்போரின் நலன் கருதி, கால்நடை மருந்தகங்கள் மற்றும் கிளை நிலையங்களில், பசு, எருமை மாடுகளுக்கு வீரிய உயர் ரக காளைகளின், விந்தணுக் களை கொண்டு, சினை ஊசி போடப்படுகிறது. இதற்கு கட்டணமாக, மாடு ஒன்றுக்கு, ஒரு முறை சினை ஊசி போட 15 ரூபாய் வசூல் செய்யப் பட்டது.

கடந்த வாரம் நடந்த கால்நடைத்துறை மானிய கோரிக்கையின் போது, கால்நடைகளுக்கான சினை ஊசி கட்டணத்தை, 15 ரூபாயில் இருந்து பத்து ரூபாயாக குறைத்து அரசு அறிவித்தது. மே.1 முதல் அனைத்து கால்நடை மருந்தகங்கள் மற்றும்கிளை நிலையங்களில் சினை ஊசி கட்டணம் 15 ரூபாயில் இருந்து, பத்து ரூபாயாக குறைக்கப் பட்டுள்ளது.

**விவசாய இடுபொருட்கள் வாங்குவோர் கவனத்திற்கு**

வடமதுரை : போலி மருந்து பிரச்னை ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் தங்களுக்கு தேவைப்படும் இடுபொருட்கள் மற்றும் பூச்சி மருந்துகளை வாங்கும் போது தனி கவனம் செலுத்த வேண்டும்.

விதை, பூச்சி மருந்துகளில் தரமானது தானா, காலாவதி நிலை என்ன, சான்று அட்டைகள் உள்ளனவா, சான்றுத்தன்மை, இயற்கையை கெடுக்காத பயனுள்ளவையா, எதிரிப் பூச்சிகளை அழிக்கும் வல்லமை படைத்ததா போன்ற விஷயங்களை மனதில் கொண்டு வாங்க வேண்டும். இடுபொருள் வாங்க செல்லும் தனியார் கடைகள் உரிய உரம், பூச்சி மருந்துகளை விற்பனை செய்ய, தகுதியான உரிமம் பெற்றுள்ளனரா.. போன்றவற்றிலும் கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு வடமதுரை வேளாண்மை உதவி இயக்குனர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.

**சம்பங்கி விலை உயர்ந்தும் விளைச்சல் குறைவு வருத்தத்தில் பவானிசாகர் பகுதி விவசாயிகள்**

டி.என்.பாளையம்:வைகாசி மாதம் முழுவதும் திருமண விசேஷங்கள் அதிகமிருக்கும் என்பதால், பூக்கள் சாகுபடி அதிகரித்துள்ளது. குறிப்பாக சம்பங்கி பூ விலை ஏறுமுகமாக இருந்தாலும், விளைச்சல் குறைவாக உள்ளதால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.திருமண சீஸனை எதிர்நோக்கி சாகுபடி செய்யப்பட்ட பூச்செடிகள் இப்போது அறுவடைக்கு தயாராக உள்ளன. திருமண மாலைகளில் முக்கிய இடம் பெறுவது சம்பங்கி. அது மட்டுமின்றி ஸ்வாமிக்கு அணிவிக்கவும், மேடை அலங்காரத்துக்கும் சம்பங்கிப்பூ அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

சம்பங்கி அதிக லாபத்தைத் தரக் கூடிய பணப்பயிர். ஒரு முறை விதைத்தாலே மூன்று ஆண்டுக்கு விளைச்சல் கொடுக்கும். இதற்கு சாகுபடி செலவும் குறைவுதான். தினமும் 15 கிலோ முதல் 25 கிலோ வரை பூக்கள் கிடைக்கும். சம்பங்கி சீஸன் இல்லாத போது கிலோ 15 ரூபாய்க்கு விற்றது. தற்போது சீஸன் காரணமாக 150 ரூபாய் வரை விற்கப்பட்டு வருகிறது.திருமண விசேஷத்தால் அதிக விலை கிடைத்தாலும் சுட்டெரிக்கும் வெயிலால் சம்பங்கி விளைச்சல் குறைவாகவே உள்ளது. ஏக்கருக்கு ஐந்து கிலோ மட்டுமே கிடைக்கிறது. நல்ல விலை இருந்தும் விளைச்சல் குறைவாக இருப்பதால் விவசாயிகள் பெரிதும் கவலையில் உள்ளனர்.இதுகுறித்து டி.என்.பாளையம் விவசாயி கார்த்தி கூறுகையில், "நான்கு ஏக்கரில் சம்பங்கி சாகுபடி செய்திருக்கிறேன். சில மாதங்கள் முன் வரை 25 கிலோ கிடைத்தது. ஆனால், கோடை துவங்கி விட்டதால் வெயில் காரணமாய் சொற்பமாக ஐந்து கிலோதான் கிடைக்கிறது. வைகாசி மாதம் திருமண சீஸன் காரணமாக கிலோ 150 ரூபாயைத் தாண்டினாலும் விளைச்சல் குறைவாக இருப்பதால் பெரிதும் நஷ்டத்தை சந்தித்துள்ளோம்," என்றார்.

**தோட்டக்கலை விவசாயிகளுக்கு கரூரில் ஒரு நாள் பயிற்சி முகாம்**

கரூர்: தோட்டக்கலை விவசாயிகளுக்கு துறை சார்பில் ஆத்மா திட்டத்தின் கீழ் ஒருநாள் பயிற்சி முகாம் நடந்தது. வட்டார அளவிலான வட்டாரத் தொழில் நுட்பக்குழு அந்தந்த வட்டார வேளா ண்மை உதவி இயக்குநரை அமைப்பாளராகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. வட்டாராத் தொழில்நுட்பக் குழுவின் மூலமாகவே இத்திட்டம் பல்வேறு வேளாண் சார்ந்த துறைகளையும் ஒருங்கிணை த்து செயல்படுத்தப்படுகிறது.

ஆத்மா திட்டத்தின் கீழ் தோட்டக்கலை விவசாயிகளுக்கு பயிற்சியளிக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்நியுதவியால் தாந்தோணி வட்டார தோட்டக்கலை விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சியளிக்கப்பட்டது. பயிற்சியினை தாந்தோணி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் சொர்ணமாணிக்கம் அவர்கள் தலைமையேற்று துவக்கி வைத்தார். பரமத்தி வட்டாரத் தோட்டக்கலை அலுவலர் கலா, ஆத்மா திட்டத்தின் முக்கியத்துவம் குறித்தும் பல்வேறு புதிய தோட்டக்கலை தொழில்நுட்பம் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கமாக கூறினார். தாந்தோணி வட்டார தோட்டக்கலை அலுவலர் நடராஜன், சொட்டு நீர்ப்பாசன ம் அமைப்பதன் பயன் குறித்து ம் சொட்டு நீர்ப்பாசனம் அØ ம க்க மானியம் பெறும் வழிமுறை குறித்தும் விரிவாக பேசினார். ஆத்மா திட்ட தோட்டக்கலை விவசாயிகளுக்கான பயி ற்சிக்கு தேவையான அனைத் து ஏற்பாடுகளையும் தாந்தோ ணி வட்டாரத் தோட்டக்க லை உதவி அலுவலர்கள் பரமேஸ்வரன், செந்தில் மற்றும் சுமதி ஆகியோர் செய்திருந்தனர்

**பால் உற்பத்தியாளர் தீர்மானம் மே 17ல் பால் உற்பத்தி நிறுத்த போராட்டம்**

நாமக்கல்: 'பால் விலை உயர்வு சம்மந்தமாக அரசு பேச்சுவார்த்தை நடத்தாவிட்டால் மே 17ம் தேதி முதல் பால் உற்பத்தி நிறுத்தம், கறவை மாடுகளுடன் சாலை மறியல் போராட்டம் போன்றவை நடத்தப்படும்' என, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் சங்கக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின்

மாநில சிறப்பு பேரவைக் கூட்டம் நாமக்கல்லில் நடந்தது.

மாநில தலைவர் முகமது அலி தலைமை வகித்தார். மாநில பொது செயலாளர் முனுசாமி, பொருளாளர் சிவாஜி ஆகியோர் முன்னிலை வகித்து பேசினர்.கூட்டத்தில், தமிழக அரசும், பால் வளத்துறையும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் பிரதிநிதிகளையும், ஆரம்ப கூட்டுறவு சங்க பணியாளர் சங்கங்களின் பிரதிநிதிகளையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.பால் விலை உயர்வு சம்மந்தமாக மே 17ம் தேதிக்குள் அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். இல்லையெனில் 17ம் தேதியிலிருந்து பால் நிறுத்தம், கறவை மாடுகளுடன் சாலை மறியல் போராட்டம் நடத்தப்படும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் பெருமாள், பால்சங்க மாவட்ட செயலாளர் ரங்கசாமி, பால்சங்க மாவட்ட தலைவர் மாரிமுத்து, விவசாயிகள் சங்க மாவட்ட துணை தலைவர் ஆதிநாராயணன் ஆகியோர் உட்பட பலர் பங்கேற்றனர்.

**பருத்தி விலை சரிவு; விவசாயிகள் கவலை**

உடுமலை: பருத்தி ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால், உள்ளூர் சந்தையில் பருத்தி விலை சரிந்து வருகிறது. உடுமலை பகுதி விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் பி.ஏ.பி., முதலாம் மண்டல பாசனத்துக்கு நீண்ட இழை மற்றும் மிக நீண்ட இழை பருத்தி ரகங்கள் இப் பகுதியில் பயிரிடப்பட்டன. அறுவடை சீசன் துவக்கத்தில் தட்டுப்பாடு காரணமாக, பருத்திக்கு நல்ல விலை கிடைத்தது.
நீண்ட இடைவெளிக்குபின், பருத்தி பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சியில் இருந்தனர். விளைச்சலும் கைகொடுத்ததால் அடுத்த சீசனில் பருத்தி பயிரிட விவசாயிகள் தயாராக இருந்தனர். இந்நிலையில், பருத்தி ஏற்றுமதிக்கு தடை விதிக்க தொழில் அமைப்புகள் சார்பில் மத்திய அரசுக்கு கோரிக்கை விடப்பட்டது.

இப்பிரச்னையையொட்டி, சிறு நூற்பாலைகள் உற்பத்தியை குறைத்ததுடன், பருத்தி கொள்முதலும் தேவையான அளவு செய்யவில்லை. பருத்தி ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்ததையடுத்து சில நாட்களாக குறுகிய மற்றும் நீண்ட இழை பருத்தி ரகங்களின் விலை தொடர்ந்து குறைந்து வருகிறது. கடந்த வார சந்தையில், குறுகிய இழை பருத்தி ரகங்கள் விலை குவிண்டால் 3,400 ரூபாய்க்கும், நீண்ட இழை பருத்தி 3,900 ஆயிரம் ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப் பட்டது. அனைத்து ரகங்களின் விலையும் குவிண்டாலுக்கு 300 ரூபாய் வரை குறைந்துள்ளது.

இறுதிக்கட்ட அறுவடையின் போது, விலை சரிவு ஏற்பட்டுள்ளதால், விவசாயிகள் அதிர்ச்சி அடைந் துள்ளனர். மிக நீண்ட இழை பருத்தி ரகங்களுக்கு கிராக்கி தொடர்வதால் விலை குறையவில்லை. இந்த ரக பருத்தி குவிண்டாலுக்கு 4,700 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படுகிறது. 70 கவுண்ட் முதல் 90 கவுண்ட் வரை நூல் ரகங்கள் உற்பத்தி செய்யும் நூற்பாலைகளுக்கு மிக நீண்ட இழை பருத்தி தேவை அதிகமுள்ளதால் இந்த ரகங்களுக்கு விலை குறையவில்லை. விவசாயிகளிடம் நேரடியாக பருத்தி கொள்முதல் செய்யும் வியாபாரிகளும் கொள்முதல் விலையை குறைத்துள்ளனர். உடுமலை பகுதியில் பயிரிடப்பட்ட பருத்தி சாகுபடியில் அறுவடை முடியும் தருணத்தில் உள்ளது. முதற்கட்ட அறுவடைகளின் போது நல்ல விலை கிடைத்த தால் இந்த சீசனில் விவசாயிகள் நஷ்டத்தில் இருந்து தப்பியுள்ளனர்.
சாகுபடி பரப்பு குறையும்: பி.ஏ.பி., முதலாம் மண்டல பாசனத்தில் பயிரிடப்பட்ட பருத்திக்கு நல்ல விலை கிடைத்ததையடுத்து அடுத்த சீசனில் பருத்தி பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டினர். பாசன பகுதிகளில் பருத்தி பயிரிட பல மடங்கு குத்தகை நிர்ணயிக்கப்பட்டது. பல்வேறு பருத்தி விதை விற்பனையாளர்களும் கிராமங்களில் முகாமிட்டு விவசாயிகளிடம் ஒப்பந்த சாகுபடிக்காக பேசி வந்தனர். ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் அடுத்த சீசனில்

விலை கிடைக்காது என்ற கருத்து விவசாயிகளிடையே பரவி வருகிறது. அடுத்த சீசனில் பருத்தி சாகுபடி பரப்பு மீண்டும் குறையும் வாய்ப்புள்ளது.

---

***தமிழ்நாட்டுக்கு கூடுதல் அரிசி ஒதுக்கீடு சோனியாவிடம், கருணாநிதி கோரிக்கை***

*புதுடெல்லி, மே.4–*

*தமிழ்நாட்டிற்கு கூடுதல் அரிசி ஒதுக்கீடு செய்ய மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யும்படி, காங்கிரஸ் தலைவர் சோனியாவிடம் முதல்–அமைச்சர் கருணாநிதி கோரிக்கை விடுத்தார்.*

*2 நாள் பயணமாக டெல்லி சென்ற தமிழக முதல்–அமைச்சர் கருணாநிதி பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார்.*

*சோனியாவுடன் சந்திப்பு*

*ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் தலைவரும், அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான சோனியா காந்தியை, கருணாநிதி டெல்லியில் நேற்று அவருடைய இல்லத்தில் சந்தித்து பேசினார். 30 நிமிடங்களுக்கு மேல் அவர்கள் இருவரும் பேசிக்கொண்டு இருந்தனர்..*

*அவருடன் தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, மத்திய மந்திரி தயாநிதி மாறன், மேல்–சபை உறுப்பினர் கனிமொழி ஆகியோர் சென்று இருந்தனர்.*

*சோனியாவை சந்தித்த பின்னர், முதல்–அமைச்சர் கருணாநிதி நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது நிருபர்கள் கேட்ட கேள்விகளும், அவற்றுக்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:–*

*தமிழகத்திற்கு கூடுதல் அரிசி*

*கேள்வி:– சோனியா காந்தியை சந்தித்தபோது எதைப் பற்றி முக்கியமாகப் பேசினீர்கள்?*

*பதில்:– மகளிர் இடஒதுக்கீடு மசோதாவை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவது பற்றி பேசினோம். தமிழ்நாட்டிற்கு கூடுதலாக அரிசி கொஞ்சம் தேவைப்படுகிறது. அதற்காக மத்திய அரசிடம் பரிந்துரை செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டேன்.*

*சட்டசபை தேர்தல்*

*கேள்வி:– ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர் திட்டம் பற்றி பேசினீர்களா? கர்நாடகா அதிலே பிரச்சினை செய்து கொண்டிருக்கிறதே?*

*பதில்:– அதிலே ஒன்றும் பிரச்சினை இல்லை. எனவே அது பற்றி பேசவில்லை.*

*கேள்வி:– சோனியா காந்தியிடம் அரசியல் ரீதியாக ஏதாவது பேசினீர்களா? வரவிருக்கின்ற தமிழகச் சட்டமன்றப் பொதுத் தேர்தலைப் பற்றிப் பேசினீர்களா?*

*பதில்:– அதற்கு இப்போது ஒன்றும் அவசரம் இல்லையே?*

*கேள்வி:– சேது சமுத்திரத் திட்டம் பற்றிப் பேசினீர்களா?*

*பதில்:– பேசவில்லை.*

*இவ்வாறு கருணாநிதி கூறினார்.*

---

## பனை ஏறும் தொழிலை விவசாயம் சார்ந்த தொழிலாக அறிவிக்க வேண்டும்

சென்னை, மே.4–
பனை ஏறும் தொழிலை விவசாயம் சார்ந்த தொழிலாக அறிவிக்க வேண்டும் என்று சட்டசபையில் காங்கிரஸ் எம்.எல்.ஏ. எச்.வசந்தகுமார் வேண்டுகோள் விடுத்தார்.

விற்பனைவரி

சட்டசபையில் வணிகவரித் துறை, கதர் துறை, தொழிலாளர் நலத்துறை ஆகியவற்றின் மானிய கோரிக்கை மீதான விவாதத்தில் காங்கிரஸ் எம்.எல்.ஏ. எச்.வசந்தகுமார் (நாங்குநேரி) பேசியதாவது:–
தமிழை முதல் பாடமாக எடுத்து படித்து, தமிழில் படித்தால் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு இருக்கிற தமிழ் மாணவர்களுக்கு, அரசுப் பணியில் முதல் உரிமை வழங்கப்படும் என்ற அறிவிப்பை செம்மொழி மாநாட்டில் முதல்–அமைச்சர் கருணாநிதி அறிவிக்க வேண்டும்.
பொருட்கள் வாங்குவதற்காக கொடுக்கும் பணத்திற்கான வரியை செலுத்திதான் நாங்கள் பொருட்கள் வாங்குகிறோம். அதிகம் பொருள் வாங்கும்போது அதன் உற்பத்தியாளர்கள் எங்களுக்கு ஊக்கத் தொகை தருகிறார்கள். அதை வைத்து வாடகை, தொழிலாளர்களுக்கு சம்பளம், அவர்களுக்கான பி.எப்., இ.எஸ்.ஐ. உட்பட பல செலவுகளை செய்கிறோம்.
ஆனால் விற்பனைவரித்துறை அதிகாரிகள், இந்த ஊக்கத் தொகைக்கும் வரி செலுத்தும்படி சொல்லி துன்புறுத்துகிறார்கள். இதை அரசு நிறுத்த வேண்டும்.

பனை ஏறும் தொழில்

தமிழகத்தில் 5 கோடி பனை மரங்கள் உள்ளன. நாடார் மக்கள் பெரும்பாலும் பனைஏறும் தொழிலை செய்கின்றனர். அவர்களையும், அந்த தொழிலையும் விவசாயம் சார்ந்த தொழிலாக அறிவிக்க வேண்டும். பலர் மீது கள் இறக்குவதாக வழக்குபோடுகிறார்கள். நாடாரில் 90 சதவீதம் பேர் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதால் அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும்.

சிவாஜிக்கு மணிமண்டபம்

சென்னை கிண்டியில் உள்ள காமராஜர் நினைவகம் அழகூட்டப்பட வேண்டும். குமரி மாவட்டத்தில் நேசமணிக்கு மணிமண்டபம் கட்டித்தர வேண்டும். சென்னையில் கக்கன், தியாகி விஸ்வநாததாசுக்கு சிலை அமைக்க வேண்டும். நடிகர் சிவாஜிகணேசனுக்கு மணிமண்டபம் கட்ட வேண்டும். சென்னை அண்ணாசாலையில் 20 ஆண்டுகளாக பீடம் மட்டுமே இருக்கும் இடத்தில் இந்திராகாந்திக்கு சிலை எழுப்ப வேண்டும். சென்னை துறைமுகத்தில் இருந்து தாம்பரம் வரை பறக்கும் பாலம் கட்ட வேண்டும்.

குளங்களுக்கு கால்வாய்

எனது தொகுதியில் வடக்கு பச்சையாறு நீர்த்தேக்கத் திட்டத்தில் இருந்து 46 குளங்களுக்கு தனி கால்வாய் அமைத்துத்தர வேண்டும். நாங்குநேரியில் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கும் பணிகள் விரைவுபடுத்தப்பட வேண்டும். 125 ஆண்டுகள் பழமையான நாங்குநேரி போலீஸ் நிலையத்துக்கு புதுக்கட்டிடம் தேவை.
பரப்பாடியில் புதிய கால்நடை மருத்துவமனை தேவை. அல்ட்ரா டீலக்ஸ் பஸ் கேட்டேன். ஒன்றாவது தாருங்கள். ஏர்வாடி திருவழுதீசுவரர்–பெரியநாயகி அம்மாள் திருக்கோயிலில் தேர் அமைக்க தமிழக அரசு ரூ.10 லட்சம் நிதி ஒதுக்கியுள்ளது. அது போதாது. இன்னும் ரூ.13 லட்சம் தேவைப்படுகிறது. நமக்கு நாமே திட்டத்தில் சேர்த்தால் அதற்கான முன்பணத்தை நானே செலுத்துகிறேன் அல்லது அரசே அந்த தேரை செய்துதர வேண்டும்.
இவ்வாறு அவர் பேசினார்.